
1760



முபஸ்மிலன்.

# சந்திரப் பிரகாஸ
# நவமணிக் கீதம்.

இஃது

கூத்தாநல்லூர் ஜனாப்

சடையன், அப்துர் ரஹ்மான்

அவர்களால் வரையப்பட்டு

ஷியூர்

பாலிய முஸ்லிம் ஐக்கிய விருத்தி
சங்கத்தார்களால்
அச்சியற்றி விற்பனை செய்யப்படுகிறது

---

விஜயபுரம்
கருணாநிதி பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்]

உள்நாட்டிற்கு விலை அணா 0—1—6.
1935.
வெளிநாட்டிற்கு விலை அணா 0—2—6.

…HTS RESERVED TO THE AUTHOR.

891:417
N35
171896

## பாலிய முஸ்லிம் இளைஞர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்

உங்களிடம் இது காலை குடிகொண்டிருக்கும் வீண் வெகுளிக்காமக் குரோதசேஷ்டைகளை விட்டொழித்தீர்களா இல்லவே இல்லை ஆனால் உங்களைச் சீர்திருத்தம் செய்வதற்காக அநுதினமும் உங்களின் நன்மைக்கேபாடுபடும் அன்பர்களுக்கு நீங்கள் உதவி அளித்து அவர்கள்சொல்லும் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறீர்களா? அதுவும் இல்லை! ஆனல் உங்களுக்கு கடவுளால் அளிக்கப்பட்டிருக்கும் பகுத்தறிவை சரியான நேரான பாட்டையில் செலுத்துகிறீர்களா? அதுவும் இல்லை! வேறு என்ன தான் செய்கிறீர்கள்! எவராவது உங்கள் வயதிலேயே இளையவரோ அல்ல மூத்தவரோ கொஞ்சம் கல்வியை கற்றுக் கொண்டு அப்பா நாம் இதுவரை கேவலவழியில் நடந்து விட்டோம். இனியாவது நேரானவழியில் நடப்போம் என அழைத்தால் ஆமாம் இவனை எனக்குத்தெரியாதா முந்தா நாள் எண்கூட கோலி விளையாடிக்கொண்டிருந்தான் அவனுடன் சேர்ந்து எண்ணைவைதான் கத்தினன் என அவன்மீது அழுக் காறுகொண்டு அவன் நடந்துகொள்ளும் தன்மையால் ஊர் ஜனங்களால் அவனுக்குக்கிடைத்திருக்கும் நல்ல உயர்தரமான கௌரவத்தின்மீது பொறாமைபூண்டு அவன் அப்படிச்செய்தான் இப்படிச்செய்தான் என அவனை இழிவுபடுத்துவதுமின்றி அவ னுக்குப்பின்புறமாக நோட்டீஸ் ஒட்டவும் தலைப்படுகிறீர்கள். என்னே உங்களின் மூடக்கொள்கை கற்றோரைக் கற்றோரே காமுறு வர் என்ற பொன்மொழிக்கொப்ப நீங்கள் எத்துணைதூரம் அவரை இழிவுபடுத்தினலும் உங்கள் மடத்தனத்தை விளக்கிக் காட்டுவதற்கு அது ஒரு அறிகுறி என்பது எல்லோருக்கும் விளங்காமற்போகா! ஆனல் அவர்களை கற்றவரேகண்டு மெச்சு வார் உங்களின் சகவாஸம் அவர்களுக்கு என்றும் வேண்டுவதே இல்லை ஆகையால் அன்பீர் இனியேனும் அம்மூடக் கொள்கைகளை விட்டொழித்து என்றும் சகோதரப்பான்மை யாய் நடக்க முன்வாருங்கள்.

இங்ஙனம்,

உங்கள் நன்மைக்குழைக்கும் நண்பன்,

சடையன் அப்துர்ரஹ்மான்,

கூத்தாநல்லூர்.

அன்பு ததும்பிய சோதரப் பெரியோர்காள்!

தங்களின் திவ்விய சமூகத்திற்கு அஸ்ஸலாமு அலைக்கும் சமூக மார்க்கவேலையே சாலச்சிறந்ததெனக்கொண்டு அதுவே வேலையாக அனுதினமும் பாடுபடும் எங்கள் சன்மார்க்கத் தொண்டர் சபையிலிருந்து தேகாப்பியாசத்திற்கென ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் பாலிய முஸ்லிம் ஐக்கிய விருத்தி சங்கத்தை தங்கள் ஞாபகத்தில் கொண்டுவருகிறோம். இத்தகைய இளைஞர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் எங்கள் சபையில் எங்களுக்கிடையில் யாதும் சண்டை சச்சரவுகள் விளைந்துவிடுமென அஞ்சி எங்கள் சன்மார்க்கத் தொண்டர் சபை உத்தியோகஸ்தரான ஜனுப் சடையன் அப்துர்ரஹ்மான் அவர்களை தலைவராகவும், கு. செ. அப்துர்ரஹ்மான் அவர்களை உபதலைவராகவும் ஏற்படுத்தி எங்களுக்குரிய சீர்திருத்தங்களையும் அவர்களாலேயே செய்து கொடுக்கப்பட்டு நாங்கள் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்துகொண்டுவருகிறோம். இச்சந்திரப் பிரகாஸ நவமணிக்கீத புத்தகத்தை சன்மார்க்கத் தொண்டர் சபையார்களின் நன்முயற்சியால் மிகுந்த சிரத்தையோடு எங்கள் சபை தலைவரும் சன்மார்க்கத் தொண்டர் சபை பைத்து ஸபா கௌரவ காரியதரிசியுமான ஜனுப் சடையன் அப்துர்ரஹ்மான் அவர்களை இப்புத்தகத்தை வரையச்சொல்லி இதை அச்சியற்றுவதற்கும், இன்னும் இது சம்பந்தமான பணப் பொறுப்பு முதலியமைற்ற இதர சகல நடவடிக்கைகளையும் எங்கள் வசமே ஒப்படைக்கப்பட்டு இருப்பதால் அன்பர்கள் இதை ஆதரித்து நமது சமூக நலன்வளர்ச்சியை பெருகச்செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். மேலும், இப்புத்தகத்தை அச்சியற்றி விற்பனை செய்வதற்கு மட்டும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் இதை எழுதிய ஆசிரியர் உத்தரவுபெறாமல் வேறு யாரும் எச்சபையாரும் இப்புத்தகத்தை பிரசுரிக்கக்கூடாது.

அப்படிமீறிச்செய்தால் சட்டபடி நடத்தப்படும். மேலும், இப்புத்தகம் புத்தக வியாபாரிகளுக்குத் தக்க கமிஷனுடன் விற்பனைக்கு தரப்படுவதால் இது சம்பந்தமான சகல விஷயங்களுக்கும் எங்களிடம் எழுதித் தெரிந்துகொள்ளலாம். மேலும், இப்புத்தகத்தைப் பிரசுரிப்பதற்காக நாங்கள்கேட்ட மாத்திரத்தில் எங்களுக்குச் சன்மானம்செய்து எங்களை ஆதரித்த உள்ளூர், வெளியூர் பிரமுகர்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆண்டவன் அன்னவர்களுக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் தந்தருள்வாராகவும்.

ஆமீன்! ஆமீன்!!

இங்ஙனம் தங்களின்,

உண்மைக் குழைக்கும்,

கூத்தாநல்லூர்,
பாலிய முஸ்லிம் ஐக்கிய
விருத்தி சங்கத்தார்,

**காரியதரிசிகள்.**

## பாலிய என் அருமைநேயர்களே!

இது காலை தங்களிடம் குடிகொண்டிருக்கும் வீண் வெகுளி காமக்குரோத கெட்ட துர்க் குணங்களை தொலைத்தொழியுங்கள் கற்றவரைக்கண்டு பரிகாசம் செய்யாதீர்கள். அவர்களை இழிவு படுத்துவதால் உங்களுக்கு யேற்படும் நலன்கள்யாது சற்றே சிந்தனை செய்யீங்கள் இனியேனும் உங்கள் மூடக்கொள்கைகளை விட்டொழிப்பீர்களென பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்,

பா. மு. ஐ. வி.

சங்கத்தார்.

# ஆசிரியர் முகவுரை.

097:917
N35

## அன்பு ததும்பிய சகோதரப் பெரியோர்காள்!

தங்களின் மேலான முகத்திற்கு இச்சிறியேனின்
அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

இச்சிறுகீத புத்தகத்தை நான் எழுதப்புகுந்த முக்கிய நோக்கம் யாதெனில் நமது சமூக இக்கால இளைஞர்கள் தங்கள் மனம் போனபோக்கில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதற்கிணங்க தங்கள் நடவடிக்கைகளை எல்லாம் வீண் விஷயமற்ற காரியங்களில் பிரவேசித்து நமது சத்திய இஸ்லாத்தின் உன்னதக் கருத்தையும் ஒரு சிறிதளவாவது உணராமல் வீண்காலம் போக்கிக்கொண்டுவருகிறார்கள். பெற்றோர்கள் மிகுந்த சிரத்தையுடன் பிள்ளைகளை ஸ்கூலுக்கு அனுப்ப இவர்கள் கல்வியின் மகிமையை உணராமல் வீண்காலம் கடாத்திவருகிறார்கள். இத்தகைய இளைஞர்களை சீர்திருத்தம் செய்வதற்காக எத்தனையோ பத்திரிகை ஆசிரியர்களும் பிரசங்கச் சிங்கங்களும் பத்திரிகை மூலமாயும் பிரசங்க மூலமாயும் அறை கூவி அழைத்தும் ஓர் சிறிதளவாவது அதற்குச் செவிசாய்த்துக் கேளாமல் கெடுதலான கேவலமான பாட்டையிலேயே இன்னும் அதிவேகமாகபோய் கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக எங்கள் சன்மார்க்கத் தொண்டர் சபையில் நான் அங்கம்வகித்து வந்த வரையில் இவர்கள் சீர்திருத்தத்திற்காக குறைந்தது 800 ரூபாய் வரை செலவு செய்து பிரசுரம்செய்து இருக்கிறோம். அப்படி செலவுசெய்தும் மேலும், அந்த கேவலபாட்டையிலே இன்னும் இருப்பதை உணர்ந்து நீண்ட நாட்களாய் ஆராய்ந்து தெரிந்தவரையில் இக்கால இளைஞர்கள் கீதங்கள் அடங்கியபாட்டு புத்தகங்களையே அதிகம் விரும்பி அதன்மீதே அவர்கள் பூரணகவனத்தையும்

செலுத்துகிறார்கள். மேலும், அதையே கூர்ந்து கவனித்து ஆராய்ந்தரிகிறார்கள். ஆனதால், அவர்கள் விருப்பும் இம்மாதிரி ஓர்க்கிதபுத்தகம் இயற்றி நமது சத்திய இஸ்லாத்தின் உன்னத மகிமையை விளக்கினால் அவர்கள் மனதில் அப்படியே பதிந்து அதனால் நமக்கு அனுகூலம் ஏற்படுமென்றெண்ணி கரடான தமிழில் எழுதாமல் அவர்கள் தெளிவாய் விளங்கும் வண்ண மிகுந்த எளியநடையில் தெள்ளிய தமிழில் யாவர்கள் பார்த்தவுடன் சட்டென புலப்பட்டு அரிந்துகொள்ளுமவிதமாய் அவர்கள் விரும்பத்தக்க அழகிய வர்ணமெட்டுகளில் அவர்கள் இது பொழுது எண்ணசெய்து கொண்டிருக்கிறார்கள். என்னசெய்ய வேண்டு மென்பதையும், நமது சுத்த சத்திய இஸ்லாத்தின் மேலான புகழையும் தொழுகையின் அவசியமும் அதனால் அடையும் அனுகூலத்தையும் எடுத்துக்காட்டி நமது ரசூலே கரீம் (ஸல்) அவர்களின்பேரிலும் அவர்கள் காரணத்தை விளக்கிக்காட்டி நமது காரண குரு முஹைறயதீன் அப்துல்காதர் ஜைலானி அவர்கள் பேரிலும் அவர்கள் காரணத்தை விளக்கிக்காட்டி நாகூர் ஷாகுல் ஹமீதொலி ஆண்டவர்கள் அவர்கள்பேரில் அவர்கள் காரணத்தை விளக்கிக்காட்டியும் நமதூர் அப்துல்முகம்மது ஆலீம்சா அப்பா அவர்கள்மீதும் புதக்குடி அப்துல்கரீம் ஹஜரத் அவர்கள்பேரிலும் அவர்கள் காரணங்கள் அப்படியே அவர்கள் மனதில் உறுதி பதியும்படியாய் எழுதி இருக்கிறேன். இதன் பயனாய் நம் சமூக யுவர்களுக்கு மிக்க நலன் அளிக்குமென்று பெரிதும் நம்பியே இச்சன்மார்க்கத் தொண்டில் நான் பிரவேசித்துள்ளேன் இப்புத்தகம் ஜாடாவும் எம்மால் வறையப்பட்டு எமது குரு சாது ஆத்தர் அவர்களால் திருத்தம் செய்யப்பட்டிருப்பதால் இதில் குற்றங்கள் இருக்காது என்பதே எம்மின் பூரணமான நம்பிக்கை. அப்படி ஏதேனும் பிழைகள் இருக்குமானால் எம்மை க்ஷமித்து இன்னும் இவைபோன்ற அநேக சன்மார்க்கப் பிரசுரங்களை இயற்றுவதற்கும் எமக்கு அறிவு வளர்ச்சி, கல்வி ஞானம், இவைகள் எல்லாம் நாளுக்கு நாள் பெருகிவளரும்படியாய் தாங்கள் யாவரும் ஆண்டவனிடம் துவா இரஞ்சவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இத்தகைய திருப்பணியில் ஈடுபட எமக்குக் கல்வி ஞானம்போதித்த எமது குரு ஸாது

ஆத்தர் அவர்களுக்கும் எம்மை இப்புத்தகத்தை எழுதி வெளி யிடும்படியாய் அனுதினமும் தூண்டுதல் செய்த எமது உள்ளூர் வெளியூர் அபிமானிகளுக்கும் இப்புத்தகத்தை அச்சிடப்பெறும் முயற்சியுடன் முன் வந்த பாலிய முஸ்லிம் ஐக்கிய விருத்தி சங்கத்தார்களுக்கும் நான் இவ்வேலையை செய்ய ஆரம்பித்தது முதல் எம்முடன் இரவும் பகலும் சலியாது ஒத் துழைத்த எமது ஆப்த நண்பர்களுக்கும் எம்மின் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்வதோடு பெரியோர்களும், சிறியோர்களும் இப்புத்தகத்தை ஆதரித்து நாங்கள் எடுத்துக் கொண்ட இப்புண்ணிய வேலையை ஈடேற்றிவைக்கும்படியாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வஸ்ஸலாம்!

இங்ஙனம் தங்களின்,

சன்மார்க்கத் தொண்டன்,

கூத்தாநல்லூர், } சடையன் அப்துர்ரஹ்மான்,
ஆசிரியன்.

## எமது குரு ஸாது ஆத்தர் இபுருஹீம் அவர்களால் கூறப்பட்ட

# தந்துரை

கட்டளைக் கலித்துறை.

சொற்பொருள் யாப்புஅணி யிசையோடு தொகுத் துரைக்கும்
நற்றிரனோடு நன்னூல்வி கண்டுநயந்த தமிழ்க்
கற்றிலனு யினுங்கவி வானர்மெச்சக்க விதைச்சொலும்
அற்புதச் சடையன் அப்துர்ரஹ்மா னெனும் ஆர்வலனே

அந்தம் புகழ்பெறும் அந்தண ரோடும் அருளுடையார்
சந்திரப் பிரகாஸநவ மணிக்கீதச் சாரமதைச்
சொந்தத் தமிழில் விந்தையதாய்க் கவிதொகுத் துரைத்தான்
நந்தஞ் சடையன் அப்துர்ரஹ்மா னென்னும் நட்பினனே

சத்திய ஞானச் சமரஸயோகந் ததும்பி நின்று
நித்திய வாழ்வின் நின்மல சுத்தம் நிறைந்து சூழ்ந்து
வித்தையுங் கல்விச்சித் தியும்பெற் றுவிபுலே வாழ்கப்
பெற்றிடும் சடையன் அப்துர்ரஹ்மானெனும் பெட்பினனே.

### வெண்பா.

காமாது பூமாதும் நடுநாவில் நின்றிடவே
பாமாது என்று முன்னைப் பார்த்திடவே—ஓமாதின்
சற்புத்திர சாதனமே சடைய னப்துர்ரஹ்மானே
கற்பகக் கவியருளக் காண்.

### காப்பு.

சந்தந் தரும்புகழ் தத்துவ மிக்கோர் தமதுபதம்
சிந்தையில் வைத்துச் சித்தியும் முத்தியுஞ் சேருதற்கு
சந்திரப் பிரகாஸநவ மணிக்கீதச் சிறப்பைச் சொல்ல
அந்தமும் ஆதியும் மிலாத தனிப்பெரும் அருளே காப்பு.

## கடவுள் வணக்கம்

(ஜெயராஜமனோகர்மாரதியே என்ற இசை.)

### பல்லவி.

1. அண்டபகி ரண்டமெங்கும் ஆளும் இறையோன்
அவனடி பணிந்தே ஆரம்பஞ் செய்கிறேன்
மண்டல மெங்கும் மகிமைப்ர தாபம்தங்கும்
மாபரனே உந்தன் அடிபணிந்தே எங்கும் (அண்ட)

(தோகையரா)

நீண்டநாளாய் என்மனதில் நிறைந்ததோர் குறைக
ளெல்லாம் நிவர்த்திசெய்ய
ஆண்டவா உனதருளே அநுதினமும் பணிந்திட்டேன்
அடியேனைய்யா

பாட்டு.

2. ஜெயமாமணம் வீஸிட வந்த உந்தன்
ஜெம்மல் மஹ்மூதரின் பெயராலே தந்தேன்
நயமாக எம்மை ரக்ஷித்தாளும் எந்தன்
நலீசேர் குறையை தீர்த்தாளும் உந்தன் (அண்ட)

(தோகையரா)

நிறைந்தபுகழ் தாங்கியே வறைந்தெழுந்த இக்கீத
நிகழ்ச்சி தன்னால்
குறையுங் குற்றமாம் பிழைகாணில் க்ஷமித்தருள்க
குணப்பேற்றினால்

பாட்டு.

3. மண்ணுமனு ஜின்கள் முதலாய் படைத்த எந்தன்
மாதவனே உனதடி வேண்டி நொந்தேன்
இன்னும் எந்தன் நாட்டமும் இசைபெறவே
எதிர்கால வாழ்வும் கெதிசேர வந்தேன் (அண்ட)

(தோகையரா)

அன்புடனே இப்புத்தகத்தை பிரசுரித்த பாலிய முஸ்லிம்
ஐக்கிய விருத்தி சங்கத்தார்க்கும்
பண்புமிகும் எமதுகுரு ஸாஹு ஆத்தர் பாக்கியப்
பெரியாருக்கும்

பாட்டு.

4. உடையோனே உன்கிருபை தனைப்புரிவாய்
உண்மையுடன் வாழ்ந்திவர உதவிசெய்வாய்
சடையன் அப்துர்ரஹ்மான் துதியைப் பார்ப்பாய்
சத்திய நிலையிலென்னை நித்தியம் காப்பாய் (அண்ட)

## (மாதவனே மதனாகரனே என்ற இசை.)

பல்லவி.

எங்கும் ஆனந்தமே என்றும் பாடுவோமே

அனுபல்லவி.

1. பொங்குமண ஜெயகுண மாமணமே
புண்ணிய மஹ்மூதரின் ஆனந்தமே
எங்கும் ஆனந்தமே—புகழ்
பாடுவோமே (எங்கும்)

2. ஹக்கன் இரசூலராய் வந்து காட்சி தந்தோரே
காணும் உயிர்கள் யாவர்க்கும் மோக்ஷம் ஈந்தோரே
எங்கும் ஆட்சிகொண்டோரே—ஏந்தும்
ஆனந்தரே (எங்கும்)

3. உத்தம மதமாம் இஸ்லாம் சத்திய மதமே
உண்மைபுகழ் விளங்கிடும் சமரஸமே
நித்தம் ஓங்கிடுமே—புகழ்
தாங்கிடுமே (எங்கும்)

4. காரணப்பொருளாய் எங்கும் காட்சி பெற்றாரே
காத்தமுன் நபியாய் அருள்சாட்சி உற்றாரே
நபி நாதர்நீரே—ஸ்ரீமான்
முகம்மதரே (எங்கும்)

5. சத்தியமதம் இஸ்லாத்தைச் சாட்டிசென்றாரே
சன்மார்க்க உண்மை நிலையை காட்டிநின்றாரே
நபி மஹ்மூதரே—பரி
பூரணரே (எங்கும்)

6. ஒற்றுமையே இஸ்லாத்தின் உண்மை என்றாரே
ஓங்கும் ஞானநன் னிலையை ஊன்றவைத்தோரே
ஜெம்மல் மஹ்மூதரே—எங்கும்
பிரகாசரே (எங்கும்)

7. சன்மார்க்கப் பிரவாஹந்தன்னில் தவழ்ந்திடவே
சடையன் அப்துர்ரஹ்மான் துதி பாடிடவே
உண்மை நிலை சொல்லவே
நன்மையைக் கொள்ளவே (எங்கும்)

## (தாயே மீனாக்ஷிகண்பாராய் என்ற இசை.)

### பல்லவி.

பகுதாத் தரசரே கண்பாராய்—எங்கும்
பாக்கிய முஹியியித்தீனேகேளாய் (ப)

### அனுபல்லவி.

1 நகுமாமணி திகழுங் கதிர்நாதா அருள்
நட்பாயெமை ஆளுந் தவப்போதா
புகழும் பல உயிரின் நீதா எங்கள்
புனித கைங்கரிய ஸமேதா (ப)

2 ஜெய்லானி வந்த எங்கள் கோவே
தேவன் புகழும் மஹ்பூபே
செய்வினை தீர்க்கும் என்கோனே எங்கள்
ஜெம்பல் முஹியியித்தீனே (ப)

3 மாண்டபெண் உயிரதை மீட்டு
மருத்துவ மிலங்கிய நாதா
ஆண்டோ னின்அருள் ஞானக்கோவே எங்கள்
அருள்நபி புகழும் மஹ்பூபே (ப)

4 அகமியக் கடலெனும் கோனே
அறிவோர் புகழ்ந்திடும் தீனே எங்கும்
இகபர மிரண்டிலும் தானே
இன்பம்தரும் முஹியியித்தீனே (ப)

5 காரணக் கடலாய் நீர் வந்து எங்கும்
காட்சி அளித்துள் ளீர்தந்து
பூரணம் தாங்கிடும் கோனே எங்கள்
புண்ணியர் முஹியியித்தீனே (ப)

7 உடையோன் பக்தியிலே என்றும்
உவந்திடச்செய்குவீர் நீர் இன்றும்
சடையன் அப்துர்ரஹ்மான் துதியே இதை
சந்ததமும் படித்தேன் நான் கெதியே (ப)

(கமலஹோபையா என்ற இசை.)

பல்லவி.

காரணம் விளங்கிடும் காட்சி அளித்த எங்கள் காதர்ஒலிமீர் (கா)

அனுபல்லவி.

1 பூரணம் தாங்கிடும்—புண்ய நாகூர் வாழ்
காரண குருவாக மாட்சி புகழைத்தந்த காதர்ஒலிமீர் (கா)

2 மண்டலம் பிரகாசிக்க—தொண்டர்கள் போற்றிநிற்க
கண்டுகொண்டு காரணம் காட்டிவைக்கும் எங்கள் காதர்ஒலி
[மீர் (கா)

3 கைக்கண்ணுடியைக் கொண்டு—கப்பலைக்காத்த நாதா
மெய்க்கண்ணுடி இஸ்லாத்தின் மாதவமே எங்கள் காதர்ஒலி
[மீர் (கா)

5 வெண்குஷ்டம் ஜன்னி முதல்-வினைபல நோய்களெல்லாம்
கண்மூடி திறப்பதற்குள் காததூரம் ஒட்டும் காதர்ஒலி
மீர் (கா)

6 தீராதகுன் மரோகம்—தீர்த்துவைக்கும் பெரியீர்
நேரிடும் விபத்தெல்லாம் நிவர்த்திசெய்யும் எங்கள் காதர்ஒலி
மீர் (கா)

7 மனக்குறை தீர்த்துவைக்கும்—மண்டலம் பிரகாஸிக்கும்
பணக்குறைமிடிமையை பாங்தேரட்ச்செய்யும் எங்கள்
காதர்ஒலி மீர் (கா)

8 உடையோனுக்குகந்த—உண்மையில் சிறந்த
சடையன் அப்துர்ரஹ்மான் சாற்றும்தமிழ்ச் சாரத்துதி
காதர்ஒலிமீர் (கா)

## { மஹாராணி பேரைச்சொல்லியே மருந்தை உறைத்தான் என்ற இசை. }

பல்லவி.

ஞானஅருள் மேவிடும் அப்துல்கரீம் நாதா
நாதன ருட்புகழை நானிலம் விளக்க வந்த (ஞான)

அனுபல்லவி.

1. ஆண்டவனின் அருளே
அன்பாய்க் கொண்டபுகழே
தானவனின்அருள் மோனவிகாஸம்
வானும்வழிதர தியானம் புரிந்திடும் (ஞான)

2. காலமெல்லாம் சன்மார்க்கம்
காட்சியாய் உழைத்த நோக்கம்
ஆலமெல்லாம் புகழ்ந்திடும் நேஸம்
அற்புத தற்பர சொற்பிரகாஸம் (ஞான)

3. தவந்தரும் புதக்குடியில்
தலைமை நாவிராய் இருந்து
உவப்புறுந் தவஞ்ண உத்தமராய்கொண்டு
ஓங்கிடும்புகழ் பலதாங்குந் திருவொலி (ஞான)

4. சத்திய இஸ்லாத்திற்காக
நித்தியம் உயிரை ஈந்து
சங்கடபாதகம் தங்கடம் யாவுமே
பங்கமில்லாமெலே அங்கது ஓடிட (ஞான)

5. புகழ்பெருங் காட்சிதந்து
புவியைவிட்டு மறைந்த
புண்ணியஜோதி பொங்கிடும் கியாதி
புவியிற் பற்பல அற்புத மேவிடும் (ஞான)

6. சன்மார்க்க நீதிகளைத்
ஜகத்தினில் நாட்டிச்சென்ற
நன்மார்க்கத்தின் நனிமிகு ஓங்கிட
புன்மார்க்கத்தை பொய்பாகக் காட்டிய (ஞான)

7. உடையோனருளில் என்றும்
உவந்து கவிதை கூறும்
உத்தம சடையன் அப்துர்ரஹ்மானின்
சத்திய பக்தியின் சித்த மிலங்கிட (ஞான)

---

## (கல்யானே வாலேலஸையாங் என்ற இசை.)

பல்லவி.

போதம் குலவும் கூத்தாநல்லூர் வாழ்போதரே
நீதம் விளங்கும் அப்துல்முகம்மத் ஒலிநீரே (போ)

அனுபல்லவி.

1. அடையலர் கெடிபட—அமைந்து நின்றோரே
உடையோன் பக்தியில் என்றும்-உவந்திடும்தீரரே (போ)

2. உயிருடன் காரணூ—உற்பவம் விளைத்தோர்
அயரா திருந்துயோக-அஷ்டாங்கம் நிலைத்தோர் (போ)

3. காரணக் கடலாய்—காட்சி அளித்த
பூரணம் தாங்கிடும்—என் புண்ணியநாதரே (போ)

4. அகமியக்கடலாய்—ஜகத்தினில் வந்த
இகபரசாதனத்தை—இயம்பிடும்பீர்நீரே (போ)

5. மண்ணைப்பிர ஸாதமாக்கி—மகத்துவம் விளைத்தோரே
கண்ஒளி இழந்தானை—கதிபெறச் செய்தோரே (போ)

6. கருணைப்பிர தாபத்தினல்—கமழ்ந்திடும் கூத்தாநல்லூர்
தருணமிது தருணம்—தயவு தந்தாள்வீரே (போ)

7. படைத்தோன்—பக்திப்பிரவாஹம் பாரெங்கும் வீஸிட
சடையன் அப்துர்றஹ்மான்—தமிழ்க்கவி தாங்கிட (போ)

(ஐந்துகரனுக்கிளைய என்ற இசை.)

1. அன்புள்ள சோதரரே
ஆர்வமுள்ள வாலிபரே
இன்ப இஸ்லாத்தின்படி—யுவர்காள்
அன்புடனே நடந்திடுவீர் (அன்புள்ள)

2. வீண்வெகுளிக் காமக்கதை
வேண்டாம் அதை விட்டொழித்து
ஆண்டவன் ஜோதிதனை—யுவர்காள்
அன்புடனே பெற்றெழுங்காள் (அன்புள்ள)

3. கதை காவியங்கள் பேசுவதால்
கண்டபலன் ஒன்றுமில்லை
மதிக்கும் ஜகந்தனிலே—யுவர்காள்
மகிமையைப் பெற்றெழுங்காள் (அன்புள்ள)

4. காலிகள் கூட்டுறவால்
கஷ்டங்கள் பல சூழுமே
பால்யம் நன்மைபெறவே—யுவர்காள்
பாரினில் சுகம் உறுங்காள் (அன்புள்ள)

5 அறிஞரின் கூட்டுறவால்
அடைவீர் பலப்புகழை
சரிநிறை இஸ்லாத்தையே—யுவர்காள்
சங்கையுடன் பிடித்தெழுங்காள் (அன்புள்ள)

6. ஒற்றுமை இல்லாத வாழ்வு
உங்களிடம் மிகத்தாழ்வு
வேற்றுமையை விட்டொழித்தே—யுவர்காள்
வேண்டுவதைத் தேடிடுங்காள் (அன்புள்ள)

7. பத்திரிகை படிப்பதினால்
பலவாம் நலன்களுண்டு
நித்தம் கல்விதெரிந்தே—யுவர்காள்
நீதிபெற முன்வாருங்காள் (அன்புள்ள

8. சிந்தனையை செலவழித்து
சீரும் சிறப்பும்பெற்று
அந்தமுடன் வாழ்வதற்கு—யுவர்காள்
அன்புநிலை கைக்கொள்ளுவீர் (அன்புள்ள)

9. உடையோன் ஒருவனையே
உவக்கும் ஆத்தர் சீடனும்
சடையன் அப்துர்ரஹ்மான்—யுவர்காள்
சாற்றும் தமிழ் துதிபாடுவீர் (அன்புள்ள)

---

(அல்லாஹு அல்லாஹு என்ற இசை.)

1. மாபெறும் மக்கா வாழ்ந்த ராஜரே
மானிலத்தோரை ஈடேற்றும் போஜரே
தாபரனருள் ஒளி தாங்க வைத்தோரே
தயாரசூல் யாரசூல் யாரசூல் யாரசூல் (மா)

2. மாயஉலக வாழ்வினில் நான் நின்று
மயங்கி அடியேன் உனதருள் மறந்து
தூயநிலை யுணராமற் பிறந்து
தயாரசூல் யாரசூல் யாரசூல் யாரசூல் (மா)

3. மண்டலமெங்கும் இஸ்லாமே தங்கும்
அண்டபகிரண்ட மெங்குமே ஓங்கும்
தொண்டனுக் கருள் நாமமே பொங்கும்
தயாரசூல் யாரசூல் யாரசூல் யாரசூல் (மா)

4. படைத்தவன் கருணைப் பிரதாபமே மேவும்
பகரும் ஐக்கிய சங்கப் பாக்கியநேஸம்
சடையன் அப்துர்ரஹ்மான் துதிவீஸும்
தயாரசூல் யாரசூல் யாரசூல் யாரசூல் (மா)

## (யாரப்தொபத்தாதவ்ஸீரே நபி)

### பல்லவி.

மஹ்பூபே முகம்மது யாரசூலே
வஸல்லி அலா வஸல்லி அலா (ம)

### அனுபல்லவி.

1. காட்சி அளித்தோரே காரணர் நீரே
மாட்சிமிருந்த மஹ்மூதரே—ஹை
சாட்சிபகர்ந்த சர்தாரே வஸல்லி அலா வஸல்லி அலா (ம)

2. வேதம் விளங்கிடும் விமலனின் றாதா
வேண்டினோர்க்கின்பம் விளைத்திடும் நாதா—ஹை
போதம்துலங்கிடும் புண்ணிய முகம்மதுஸல்லி அலா
வஸல்லி அலா (ம)

3. ஹக்கன் திருத்தூதராய்க் காட்சி அளித்த
காமில் முகம்மதுவாய் காரணப்பூத்த—ஹை
ஹக்கோன் முகம்மது யாரசூலே வஸல்லி அலா
வஸல்லி அலா (ம)

4. ஸலாவத்லது முழக்கி சந்தோஷம்துலக்கி
சத்திய ஞானக் கீதங்கள் விளக்கி—ஹை
அல்லாஹ்வின் அருள் வள்ளல் அஹமது நபியே
ஸல்லி அலா வஸல்லி அலா (ம)

5. சந்ததம் அருட்பிரகாஸமே தங்கும்
சடையன் அப்துர்ரஹ்மான் துதிபொங்கும்—ஹை
அந்தமுடன் படித்தோம் தினமருள்வீர் வஸல்லி அலா
வஸல்லி அலா (ம)

(தந்தைநேத்ரமேபிரகாஸிக்க என்ற இசை.)

பல்லவி.

இஸ்லாம் மார்க்கமே பிரகாஸிக்க இளைஞர்தேடும் கடமையே

அனுபல்லவி.

1. அஸலாம் மூலக்கொள்கை துலங்கும் ஆண்டோன்
அருளை தாங்கியே
இஸ்லாம் மார்க்கம் எங்கும் இலங்க இளைஞர்தேடும்
கடமையே

2. வீண்வெகுளி வேடிக்கை தனைவேண்டாம் அதனை நீக்கியே
ஞான நபிசொல் நேயவாக்ய நீதிநெறியை தூக்கியே

3. ஆதிமுதலில் நம்மைபடைத்த! ஆண்டோன்சொல்லை
நோக்கியே
ஜோதி நபியாம் யாரசூலின் சுகுணமொழியை தேக்கியே

4. இளம்வயதில் நிலைமைதெரிந்து இனிது நடப்பீர்பாரிலே
பழமைக்கதைகள் பாவச்செய்கை பறக்கச் செய்வீர்
நேரிலே

5. ஒற்றுமையின் உயர்திணையை ஒன்றாய்ப்பிடித்து தூக்கியே
நத்துப்புகழும் நாடும்பாக்கியம் தேடிப்பெறுவீர் ஆக்கியே.

6. இஸ்லாப்வேதம் புர்கானை நீர் என்றும் ஓதும் இனிதுடன்
அஸலாம் ஈமான் அதனைவிடாது அன்பாய் நடப்பீர்
புகழுடன்

7. கல்வி இல்லாக்குறையை நீத்து கல்வி கற்க வருவீர்நீர்
சொல்விதம் கேள் சொன்னபுகழும் சேர்ந்து ஒன்றாய்
பெறுவீர்நீர்

8. படைத்த இறையோன் பக்தியே என்றும் பன்பாய்க்
கொண்ட பாலநான்
சடையன் அப்துர்ரஹ்மான் சொன்னசாரத் தமிழ் நேஸம்
தான்

## (இலவணி மெட்டு.)

பல்லவி.

1. பசுபதி பரமதுவே தாந்தமயில்
மிசைமதி வருமொலியே—அப்துல்கரீம்
மகிபரின் பதந்துதியே
அண்ணலர் கதியே--அருள்வார் நிதியே
அருளம் பலமருள் வதும்பெரும்பதியே (பசுபதி)

2. சரமசர முமதுவே--ருகா தொன்ருப்
பிரசமருணன்றெளிவே-புணருத்தாரம்
பிறித்தறிந் திடவழியே
பிறிவதறியே-பிறப்பையுறியே-பாரின்மிசை
பலன்தரும் பொருள்தெரியே (பசுபதி)

3. தாருலகுறுமணியே-தானமுயர்
புரவலர் துதிகனியே பணிந்துழலும்
இரவலர் மனப்பிணியே
அகற்றுமினியே-அருளின்நன்னியே-அவனிமிசை
அரும்பெரும் பொருள்பணியே (பசுபதி)

4. தவந்தருந் திருத்தருமா புரியின்மிசை
நவம்பெறு மருள்வரமா எனைப்பினைத்த
பவமறுத்தாள் திறமா
இங்கித தருமா-எளியேன்புரமா-இரங்கியருள்
இனியெனக் கொருவரமா (பசுபதி)

5. பருவறல் படறகல பாஞ்சசன்யப்
பொருள் வரக்கொடுமகிழ பார்த்திபரே
நிரந்தர மடிபுகழ
நீதியாய்த்திகழ-நித்தமும்புகழ-நீதம்புறி
நெறி அப்துர்ரஹ்மான் வாழ்க. (பசுபதி)

## (ஞானப்பண்டிதமோதிலால் என்ற இசை.)

பல்லவி.

சோதர சோதரிகாள் இந்து தேசத்தின்
சொந்தமான முஸ்லிம் நேயர்காள் (சோ)

அனுபல்லவி.

1. ஆதிநிலையைத்தேடி அனைவோரும் ஒன்றாகூடி
நீதிவிளங்க நாடியே இஸ்லாத்தின் சட்ட
நெறியைத் துலங்கப்பாடியே (சோ)

(தோகையரா)

ஆண்டோனை வணங்காது அறியாமையால் இந்த
அவனியில் திரிந்துழன்றே
அச்சமொடு பக்தியும் நிட்சய நற்புத்தியும்
அத்தனையும் அகல நின்றே

(டாட்டு)

2. கொண்டாட்டமாய் இருந்தே கோமான்தனை மறந்தே
தொண்டு செய்யாது திரிந்தே சன்மார்க்கம்விட்டு
தாறுமாறாக அலைந்தே (சோ)

(தோகையரா)

உண்பதுறங்குவதே உத்தமமெனக் கொண்டு
உலவுமதி இளைஞரெல்லாம்
ஊண்மையை இழந்து உறுபலன் தவிர்ந்து
உதவாது காலமெல்லாம்

(பாட்டு)

3. உண்மை நிலைதெரிந்தே ஓதும் புகழ் புரிந்தே
நன்மையை நீர் அறிந்தே நலன் தெரிந்தே
நட்பாய் உழைப்பீர் நடந்தே (சோ)

(தோகையரா)

கதைகாவியங்களை அகற்றியேஉண்மை
நெறிக்கட்டளைக் கடைப்பிடித்தே
கருணையொடு அன்பீகை இறக்கமும் கதிதரும்
வழிதொடுத்தே.

(பாட்டு)

4. சுத்தசமத்துவமே தோன்றும் புகழ்தருமே
பக்திபிரவாஹம் பெறுமே பலன் மிகுமே
பாதகம் யாவும் நீங்குமே (சோ)

(தொகையரா)

இஸ்லாத்தின் இயற்கையெங்கே வணக்கமெங்கே
இரவலர்க்கு அளிக்கின்ற தருமமெங்கே
விஸ்வாஸ நிலையெங்கே ஐக்கியமெங்கே
வாழ்வுதரும் கல்வி முதல் ஞானமெங்கே

(பாட்டு)

5. சாந்தி சமரஸமே தாஹா நபிநேஸமே
எந்தும் புகழாய் வீஸுமே இஸ்லாம் வாஸமே
எங்கும் ஜோதிப்ரகாஸமே (சோ)

(தொகையரா)

ஒற்றுமையாம் உயர்வுதனைப் பெறுவதற்கு
உன்னதமாம் கல்விநிலை கூட்டிவைப்போம்
பற்றலரும் பணிந்திடவே நற்றவமாம் சன்மார்க்க
பாதையினை நாட்டிவைப்போம்

(பாட்டு)

6. அடிமை விடுதலையே யார்க்கும் சமநிலையே
சடையன் அப்துர்ரஹ்மான் சொல்லே தமிழ்க்கலையே
சந்ததம் சமூக சேவையே (சோ)

## (ஆடவர் நேசம் என்ற இசை.)

பல்லவி.

யாரசூ லுல்லாஹ்ற என்னை ஆளும் ஹபீபுல்லாஹ்ற (யா)

அனுபல்லவி

1 பாரினில் வேதா — பரமனின் தூதா
பக்திப்பிரதாபா — பாக்ய மஹ்மூதா — உம்மை
போற்றிப் புகழ்ந்தேன் என் (யா)

2 ஏழையான் காரும் — இரட்சித்து ஆளும்
உன் தாளைத் தந்தாளும் — ஸர்தாரே பிழைதீரும் — எம்மை
ஆண்டருள்புரிவீர் — நீரும் (யா)

3 தருணமிது நீரே — தயவுசெய்வீரே
தாஹாநபியேரே — தந்தாள்புரிவீரே — எங்கும்
சாட்சியானோரே — நீரே (யா)

4 வேந்தனின் தூதா — விகஜிதப்பாதா
வந்தும் நபி நீதா — இரசூல்மஹ்மூதா — எங்கும்
சாந்த புவி நீதா — நாதா (யா)

5 இஸ்லாத்தின் வாஸர் — ஈமானின் நேஸர்
விஸ்வாஸ நாதர் — வேந்தனின் தூதர் — என்
நேஸமதைப்பாரும் — என் (யா)

6 உடையோன் தனையே — உவந்திடும் நானே
சடையன் அப்துர்ரஹ்மானே — துதி செப்பவந்தேனே — இதை
ஒப்பிட்டுக்காரும் — தானே (யா)

## (வையாபுரி திருக்கண்ணளா என்ற இசை.)

### பல்லவி

மதினபுரி திருக்கண்ணளா--திருக்கண்ணளா
என்னை வந்தாள் குணம் புரிசெய் மேலா.

### அனுபல்லவி

1 பதியில் இலங்கிடும் புண்ணிய மூர்த்தி
புகழுதே எங்கும் கீர்த்தி —ஹா
துதிமிக இலங்கிய நீதர் — நல்ல நீதர்
எம்மைப் பதியில் அழைக்கும் மஹ்மூதர் (மதி)

2 ஆண்டவன் அருளென்னும் ரஹ்மத்தை பெற்றோர்
தாண்டவமாய் நின்றோர் —ஹா
பூண்டநம் இறைவனின் தூதர்—எங்கும் தூதர்
எம்மை ஆண்டர சாளும் நபிநாதர் (மதி)

3 அன்பெனும் இஸ்லாத்தை மன்பதைக்குகந்த
அஹ்மதர் ஆனந்தமே--ஹா
இன்பப்பதியில் இலங்கிய—துலங்கிய
எங்கள் இறைவனின் இரசூலாமே (மதி)

4 ஐங்கால வணக்கத்தின் அருள்வழி எடுத்தே
அதன்படிக் கடைப்பிடித்தே--ஹா
பங்கமில்லா நம் தூதர்--நம்தூதர்
சொன்ன பாக்கிய வாக்கியம் இதுதானே (மதி)

5 இஸ்லாத்தின் கொள்கைதனை யாதும் விட்டிடாது
எடுத்து நடப்பீர் பாது --ஹா
அஸலாம் மூலகொள்கைதானே--கொள்கைதானே
இதை ஆனந்தம்பெற நடப்பேனே (மதி)

6 ஸாது ஆத்தரின் ஸத்திய சீடன்
சன்மார்க்க ஞான தொண்டன் --ஹா
சடையன் அப்துர்ரஹ்மானே--அப்துர்ரஹ்மானே
துதி சாற்றும் தமிழ் இதுதானே,

(அங்கையற்கன்னி மீனாக்ஷியே என்ற இசை.)

1 சாந்தி நபியின் ஆனந்தமே
சந்ததமும் புகழ் பாடுவோமே
பாந்தனுடன் வசனம்புரிந்து
பலகோடி அற்புதங்கள் விளைத்த (சாந்தி)

2 சாந்தி இஸ்லாம் மார்க்கத்தையே தந்த
ஏந்தும் இறுதி நபியாய் வந்த
மாந்தர்களுக் குரிமையைத்தந்த
சாந்திநபியாய் உலகில்வந்த (சாந்தி)

3 சமத்துவ ஒற்றுமையைக் காட்டியே
சார்ந்து நடக்க அருள் சூட்டியே
நமதிஸ்லாம் நிகற்றதென வூட்டியே
நாடெங்கும் நற்புகழை நாட்டியே (சாந்தி)

4. சத்திய சம்பூரண புர்கானை
நித்தியம் மக்களுக் களித்தமே
சுத்தனின் இணையற்ற ஜோதியை
காண எங்கும் நிலைநாட்டியே

5 ஆதுலர்க்கான ஸச்காத்தை ஈந்து
ஐங்கால வணக்கத்தைக் கடைப்பிடித்து
ஆதி ஒருவனிட்டத்தினிலே
அருளைப்பெற்றுக்கொள்ளக் கூறிச்சென்ற (சாந்தி)

6 பக்திமிகுந்த கூத்தாநல்லூரில்
பால்யமுஸ்லிம் ஐக்கிய சபையே
சடையன் அப்துர் ரஹ்மான் துதியே
திடமாய்ப் படித்தோம் இப்புவியே. (சாந்தி)

---

(யாமுகம்மது அல்லாவாலே என்ற இசை.)

பல்லவி.

நீதிமுகம்மது ஞானசிங்காரம் நீடும் ஜோதியே

அனுபல்லவி

1 ஆதியின் தூதராய் அகிலத்தில் வந்து
ஆண்டவன் ரஹ்மத்தாம் அருளதைத் தந்து
ஜோதியின் தூதராய் நீதியின் புகழுறும்
தோனும் உயிரினுப் பேணுந் தவம்நிறை (நீதி)

2 அருஷ—குருஷ— லௌஹகலமுத லெவையும்
அமைக்குமுன் னாதியும் படைத்தானே யுமையும்
நீதிப்பிரபல ஜோதிச் சுடரென
நீடும் தவமுடன் நாடும் புகழ்வுற (நீதி)

3 கஞ்சாக்கட்குடிப்பதே ஹராமென மொழிந்தார்
பஞ்சமா பாதகப் பவமென உரைத்தார்
அஞ்சிப்பயந்துமே தஞ்சமாய் வந்து நீர்
செஞ்சொற் புகழையே கொஞ்சிடு மென்றார்

4. வானமேழுங்கடந்து வசனமும் விண்டோர்
வல்லோன் தாத்துஸி பத்தின் வரிசையில் நின்றோர்
தானவன் நபியென வானவர் புகழ்ந்திடும்
தங்குந்தவகுண பொங்கும் முகம்மதாய் (நீதி)

3. வேதம் விளங்கவந்த விமலனின் தூதா
வேண்டினோர்க் கின்பம்தரும் விகஜிதப் பாதா
போதப்பரிமள நீதந்தனில்வளர்
புகழுக்குரியவர் தகைமைப் பிரபுவாம், (நீதி)

6 பக்தியிற்சிறந்த ஸத்ய குபேரா
பாலியமுஸ்லிம் சபைக்குபகாரா
சத்துஷித்தானந்த தன்மயக் கவிப்புகழ்
சடையன் அப்துர்ரஹ்மான் துதிசூழ்க (நீதி)

---

## (யாரப்பதூஜாவேஸ் என்ற இசை.)

பல்லவி.

மாதிரம் கவியும் மாதவ நாதரே
ஆதியின் தூதராய் ஆள்வோரே (மாதிரம்)

அனுபல்லவி.

1. உண்மை பேரின்பமதை உலகினர்க்களித்தோரே
ஒற்றுமை புகழ்நித்தம் ஓங்கிடச் செய்தோரே,
கண்கமழ் மாமதினா காரணராஜரே
காட்சிஅளித்த வேதரே (மாதிரம்)

2. அன்பாம் தவப்பொருளில் ஆனந்தங்கொண்டோரே
ஆர்வமிகும் நட்பினை அகத்தினில் தேக்கினோரே
இன்பநற் புகழுடன் இலங்கிவாழும்நீர்
இகபர மிரண்டிலும் ஏந்தும்நீர் (மாதிரம்)

3. சக்திப்பிரவாஹத்தின் சாதனஞ்சிறந்தோரே
சர்தாராய் உலகுயிர் சந்தோஷம் நிறைந்தோரே
முக்திப்பிரவாஹரே முகம்மதுநைனரே
மோக்ஷகடாக்ஷத்தின் முதுதவநபியே (மாதிரம்)

4. தடையறவே இஸ்லாத்தை தாங்கியேபிடிப்போம்
தாபரன் அருள்மிக தவந்தனில் இருப்போம்
சடையன் அப்துர்ரஹ்மான் துதிபடிப்போம்
சத்துசித் தானந்த சாயுட்சம் (மாதிரம்)

---

## (முடிவுரை வருக வருக என்ற இசை.)

பல்லவி.

சத்திய நன்மார்க்க தோழர்களே—உயர்
சாந்திமயச் சியங்கார வீரர்களே (சத்)

அனுபல்லவி.

1. நித்திய நிமலனின் நீதியின் புகழை
பக்தியுடனே நாங்கள் படித்துவந்தோம் மேலும்
சித்தியுடன் பார்வைக்கு சிறப்பளித்தோம்

2. நீண்டநாளாய் நினைவிற் நிகழ்ந்திடும் குறையை
ஆண்டோன் அருள் தாங்கியே ஆக்ச்செய்வோம்
மேலும் அவனடி பணிந்தென்றும் அன்புகொண்டோம் (ச)

3. பாலர்கள் சங்கமென்றும் சீல்மாய் ஓங்க
ஞாலமெல்லாம் புகழ்அடைந் தொளிதாங்க என்றும்
சீலமஹ்மூதரின் சிறப்பதும் ஓங்க (சத்)

4. இளைஞர் முன்னேற்றம் எங்கும் சீர்பெருகும்
விளையும் பல நலன்கள் வீவிநிற்கும் எங்கும்
வித்வக் கலை ஞானங்கள் விளங்கயார்க்கும் (சத்)

5. குற்றங் குறைகள்காணில் குணம்பெற ஆளும்
நற்றவமோங்க வழிநீர்வாரும்—என்றும்
நானிலம் புகழ்ந்திட நலிதீரும் (சத்)

6. பாலிய முஸ்லிம் ஐக்கிய விருத்தி சங்கம்
பகலவன்போல் என்றும் ஓங்கியே தங்கும்
சாற்றும்—சடையன் அப்துர்ரஹ்மான்செழும் மதுரம் (ச)

கருணாநிதி பிரஸ்—விஜயபுரம் 35 gdnn

## முஸ்லிம் சகோதரர்களிடம்

# ஓர் வேண்டுகோள்.

**ஆர்வமுள்ள சகோதரர்களே!**

அஸ்ஸலாமு அலைக்கும்

இளைஞர்களைக்கொண்டு ஸ்தாபிதம் செய்யப்பட்ட இந்த பாலிய முஸ்லிம் ஐக்கிய விருத்தி சங்கம் முக்கியமாய் இளைஞர்களை முன்னேற்ற வேண்டுமென்றே இதனை இனிதுடன் நடாத்தி வருகிறோம். இச்சங்க நிருவாஹங்களை இவர்களாலேயேசெய்து இவர்களுக்கு சங்க சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் கற்றுக்கொடுக்கவேண்டுமெனயுண்ணி அச்சிறுர்களிலேயே மிகுந்த அறிவு நிறைந்தவர்களான சிறுர் சிலர்களை காரியதரிசியாக ஏற்படுத்தி மிகுந்த சிரத்தையுடன் இளைஞர்களை முன்னேற்றிக் கொண்டுவருகிறோம். இச்சிறு சன்மார்க்க நூலான இக்கீத புத்தகத்தை பிரசுரித்ததைப்போல் இனியும் எத்தனையோ சன்மார்க்க நூல்கள் பிரசுரிப்பதற்கு வெகுதுரிதமாய் வேலை செய்து கொண்டுவருகிறோம். இதற்கு தாங்களும் உதவி அளித்து எங்கள் முன்னேற்றத்தில் கண்ணுங் கருத்துமாய் இருந்து உதவிசெய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

தங்களின் சன்மார்க்க ஊழியன்,

**சடையன் அப்துர்ரஹ்மான்,**

பிரஸிடேண்ட்,

பாலிய முஸ்லிம் ஐக்கிய விருத்தி சங்கம்.

## முஸ்லிம் சகோதரர்களுக்கோர்

# சந்தோஷச் செய்தி.

இச்சந்திரப்பிரகாஸ நவமணிக்கீத புத்தகத்தைப்படித்து இதனால் ஏற்படும் அனுகூலத்தை இன்னும் அதிகம் பெருகச் செய்வான் வேண்டி ஷை கீதபுத்தக ஆசிரியர் சடையன் அப்துர் ரஹ்மான் அவர்களால் வரையப்பட்ட யுவப் பிரபஞ்சத்தை மத கைங்கரிய மாக்கவேண்டும் என்னும் 20 பக்கங்கள்கொண்ட புத்தகம் கூடிய விரைவினில் வெளிவரும் இப்புத்தகத்தில் இக்கால இளைஞர்கள்போய்க்கொண்டிருக்கும் கேவலப்பாட்டை ஆறு வயது ஆகு முன்னமேயே பீடி குடிப்பதற்கு பழகுதல் வீண் ஆடம்பர வாழ்க்கை பெற்றோர்களுக்கு கட்டுப்பட்டு நடவாமை கல்வி இல்லாக்குறை காமாந்த காரத்தில் ஈடுபடுதல் சேரத்தகாதவரிடம் சேருதல் குடும்ப நிலையை கவனியாது நடத்தல் முதலியவைகளை கண்டித்து அநேக நன்னெறிகளை தெளிவான தமிழில் விளங்கிக்கொள்ளத் தக்க விதமாய் அச்சிடக் கொடுத்திருக்கிறோம். கூடிய விரைவினில் வெளிவரும் திகதியை ஆவலுடன் எதிர்பார்த்து எல்லோரும் வாங்கிப்படித்து நன்மையை அடைய முன்வாருங்கள்.

இங்ஙனம் தங்களின்,

பாலிய முஸ்லிம் ஐக்கிய விருத்தி சங்கத்தார்,

கூத்தாநல்லூர்.